ஒத்துக்கொண்டுதான் பல்புகள் வாங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதுபோல ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு தேவை என்று தோராயமாகக் கண்டறிந்து, அப்படி வாங்குகிற பல்புகளில் எல்லாம் உள்ளாட்சித் துறை என்றும், அதிலே வண்ணம் பூசி குறிப்பாக சதர்ன் ரெயில்வேயில் 'எஸ்.ஆர்.' என்று சுருக்கமாகப் போடுவதுபோல, அப்படிப்பட்ட அடையாளம் பல்புகளில் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலிருந்து, ஏப்ரல் 1லிருந்து அப்படிப்பட்ட நிலைமைகளை புதிதாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாமா என்பது பற்றி நம்முடைய துறையின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூகக் கூடம் கட்டுதல்

*3482 திருமதி எஸ். பி. சற்குணம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 21-வது வட்டம் டிரைவர்கள் காலனி பகுதியில் சமூகக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 21வது வட்டத்தில் ஆதி திராவிட மக்கள் அதிகம் வசித்து பேர் வருகிறார்கள். அவர்கள் இல்லத்தில் நடைபெறும் விழாக்களுக்கு வெகு தொலைவில் இருக்கிற மண்டபங்களை நாடிச் செல்வது சிரமமாக இருக்கிறது. வெளி இடங்களிலுள்ள மண்டபங்களில் அவர்கள் விழாக்களை நடத்துவதற்கும், அதிக வாடகை கொடுப்பதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, சமூக நலக் கூடம் அங்கே அவசியம் தேவைப்படுகிறது. அடுத்தக் கட்டத்திலாவது அங்கே சமூக நலக் கூடம் கட்டுவதற்குரிய பரிசீலனை மேற்கொள்ளப்படுமா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மணி 9.40

மாண்புமிகு திரு கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 5 லட்சம் ரூபாய் முதல் 8 லட்சம் ரூபாய் வரை செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் மாநகராட்சி எல்லையில் நிலம் கிடைப்பது ரொம்ப சிரமமாக இருக்கிறது. நிதிநிலை அதை விட மோசமாக இருக்கிறது. அதனால்தான் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இப்படிப்பட்ட நிதிநிலையை ஒட்டி, சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதை நிறுத்தி வைப்பதென்று அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். உள்ளபடியே ஆதிதிராவிட மக்கள் வாழ்கிற பகுதிகளில் கஷ்டங்கள் இருக்குமானால் அங்கே ஏதாவது நிலம் கிடைப்பதற்கு வழியிருந்தால், சட்ட மன்ற உறுப்பினர் போன்றவர்கள் அந்த நிலத்தை இனாமாக வாங்கித் தந்தால், அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நம்முடைய கலெக்டரின் அதிகாரத்திற்குள் வருகிற இடம் இருக்கிறது. எனவே அந்த இடத்தைப் பெற்று அந்த இடத்திலே சமூக நலக் கூடம் கட்டுவதற்கு, அதிகாரப் பூர்வமான உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: அடுத்த நிதி ஆண்டில் இதைப் பற்றி, நிதி நிலையையும் ஒட்டி விவாதித்து, ஒரு முடிவுக்கு வரலாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நம்முடைய அமைச்சரவர்கள் சொல்வதுபோல, நகரத்தில் இடம் கிடைப்பது கடினம். இந்த நிலையிலே எனது தொகுதியில் ஓரிடத்திலே இடம் தேர்தெடுக்கப்பட்டு, கட்டிடம் கட்டி, அந்த சமூக நலப் பொதுக்கூடம் திருமணத்திற்காகப் பயன்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு அது நிர்வாக அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது. மீண்டும் அந்த இடம் சமூக நலப் பொதுக் கூடமாக மாற்றப்பட்டு, பொது நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி மாநகராட்சியைப் பொறுத்தது.

கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்.

*3839 திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா